# கண்ணம்மா — எனது குலதெய்வம்

ராகம்-புன்னாக வராளி

பல்லவி

*நின்னைச் சரணடைந்தேன்-கண்ணம்மா!*
*நின்னைச் சரணடைந்தேன்!*

சரணங்கள்

*பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்*
*என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று* — *நின்*

*மிடிமையும் அச்சமு மேவியென் னெஞ்சில்*
*குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று* — *நின்*

*தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு*
*நின்செயல் செய்து நிறைவுபெறும் வணம்* — *நின்*

*துன்ப மினியில்லை, சோர்வில்லை, தோற்பில்லை,*
*அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட* — *நின்*

*நல்லது தீயது நாமறியோம் அன்னை!*
*நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!* — *நின்*

## பாடல் முதற் குறிப்பகராதி


| | | பக்கம் |
|---|---|---|
| ஆசை முக மறந்து போச்சே | ... | 43 |
| உண்ண உண்ணத் தெவிட்டாதே | ... | 5 |
| கண்ணன் மனநிலையைத் | ... | 46 |
| கனிகள் கொண்டு தரும் | ... | 50 |
| கூலி மிகக் கேட்பார் | ... | 13 |
| சாத்திரங்கள் பல தேடினேன் | ... | 26 |
| சின்னஞ் சிறு கிளியே | ... | 31 |
| சுட்டும் விழிச்சுடர்தான் | ... | 52 |
| தஞ்ச முலகினில் | ... | 63 |
| திக்குத் தெரியாத காட்டில் | ... | 43 |
| தில்லித் துருக்கர் செய்த | ... | 56 |
| தீர்த்தக் கரையினிலே | ... | 59 |
| தீராத விளையாட்டுப் பிள்ளை | ... | 34 |
| தூண்டிற் புழுவினைப்போல் | ... | 37 |
| நின்னைச் சரணடைந்தேன் | ... | 66 |
| நேர மிகுந்ததின்னும் | ... | 40 |
| பகைமை முற்றி முதிர்ந்திடு | ... | 16 |
| பாயு மொளி நீ யெனக்கு | ... | 61 |
| பூமிக் கெனை யனுப்பினாள் | ... | 9 |
| பொன்னவிர் மேனிச் சுபத்திரை | ... | 1 |
| மன்னர் குலத்தினிடைப் | ... | 57 |
| மாலைப் பொழுதி லொரு | ... | 54 |
| யானே யாகி என்னலாற் பிறவாய் | ... | 19 |

